பேரவைத் தேர்தல்: துப்பாக்கிகளை ஒப்படைக்க கோரும் காவல் துறை

சென்னை,பிப். 24: தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பாதுகாப்புக் கருதி உரிமத்துடன் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் அதை ஒப்படைக்குமாறு காவல்துறை அறிவுறுத்தத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் ஏப்ரல் மாதத்துக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. இத்தேர்தலைச் சந்திக்கும் வகையில் அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. சில அரசியல் கட்சிகள் தங்களது கூட்டணியை இறுதி செய்யும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றன. அதேவேளையில் பிரதான அரசியல் கட்சிகள் கடந்த இரு மாதங்களாகவே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

சட்டப்பேரவைத் தேர்தலை எந்த வன்முறைச் சம்பவங்களும், முறைகேடுகளும் இன்றி அமைதியாக நடத்துவதற்கு தேர்தல் ஆணையமும், காவல்துறையும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளன. இதற்காக அனைத்து மாவட்டம் மற்றும் மாநகர காவல்துறைகளில் தேர்தல் கட்டுப்பாட்டு அறை விரைவில் திறக்கப்பட உள்ளது.

இதன் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் உரிமத்துடன் உள்ள சுமார் 20,982 துப்பாக்கிகளை அந்தந்த பகுதி காவல் நிலையங்களில் ஒப்படைக்கும்படி காவல்துறை அறிவுறுத்த தொடங்கியுள்ளது. இதேபோல சென்னையிலும் உரிமம் பெற்று துப்பாக்கிகளைப் பெறுவதற்குரிய நடவடிக்கையில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் உரிமத்துடன் சுமார் 3,000 பேர் துப்பாக்கிகள் வைத்துள்ளனர். இதில் வங்கி பாதுகாப்பு உள்ளிட்ட சில பாதுகாப்புப் பணிகளை தவிர்த்து மீதி பணிகளுக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள் அனைத்தும் ஒப்படைக்க வேண்டும் என காவல்துறை தெரிவித்து வருகிறது.

குட்கா விவகாரம்: மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு அனுமதி

சென்னை,பிப்.24: குட்கா விவகாரத்தில் உரிமை மீறல் குழு அனுப்பிய நோட்டீஸை ரத்து செய்து தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, சான்றளிக்கப்பட்ட தீர்ப்பு நகல் இல்லாமலேயே மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு அனுமதி வழங்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2017-ஆம் ஆண்டு திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் பேரவைக்குள் தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை எடுத்து வந்தனர். இதுதொடர்பாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு உரிமை மீறல் குழு சார்பில் இரண்டாவது முறையாக நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்த நோட்டீஸை எதிர்த்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற தனி நீதிபதி புஷ்பா சத்யநாராயணா, உரிமை மீறல் குழு அனுப்பிய நோட்டீஸை ரத்து செய்து கடந்த பிப்ரவரி 10-ஆம் தேதி உத்தரவிட்டார். இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக சட்டப் பேரவைச் செயலாளர் சார்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், இந்த வழக்கின் சான்றளிக்கப்பட்ட தனி நீதிபதியின் தீர்ப்பு நகல் இதுவரை கிடைக்கவில்லை. எனவே சான்றளிக்கப்பட்ட தீர்ப்பு நகல் இல்லாமல், தனி நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பையா, சத்திகுமார் சுகுமார குருப் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், தனிநீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து அவரது சான்றளிக்கப்பட்ட தீர்ப்பு நகல் இல்லாமலேயே மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட்டனர்.

எடப்பாடி-போடி தொகுதிகளுக்கு முதல்வர், துணை முதல்வர் விருப்ப மனு

அதிமுக தலைமை அலுவலகத்தில் சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் எடப்பாடி தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து தலைமை அலுவலக நிர்வாகிகளிடம் புதன்கிழமை மனு அளித்த இணை ஒருங்கிணைப்பாளரும் முதல்வருமான எடப்பாடி கே.பழனிசாமி. உடன் ஒருங்கிணைப்பாளரும் துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள் கட்சி நிர்வாகிகள்.

சென்னை, பிப். 24: அதிமுக சார்பில் வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்ப மனு விநியோகம் புதன்கிழமை தொடங்கியது. தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வமும், சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் போட்டியிட கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமியும் விருப்ப மனுக்களை அளித்தனர்.

அமைச்சர்கள் மனு: இதையடுத்து அமைச்சர்கள் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் விருப்ப மனு பெற்று வழங்கினர். திண்டுக்கல்லில், திண்டுக்கல் சீனிவாசன் போட்டியிடவும், கோபிசெட்டி பாளையத்தில் கே.ஏ. செங்கோட்டையனும், சென்னை ராயபுரத்தில் டி.ஜெயக்குமாரும், குமார பாளையத்தில் பி.தங்கமணியும், தொண்டாமுத்தூரில் எஸ்.பி.வேலுமணியும் போட்டியிட விருப்ப மனு அளித்தனர்.

அதிமுகவின் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, கிருஷ்ணகிரிதொகுதியில்போட்டியிடவும், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியில் போட்டியிட வைத்திலிங்கமும் விருப்ப மனுக்களை அளித்தனர்.

ஒரே நாளில்... விருப்ப மனு தொடங்கிய நாளான புதன்கிழமை மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மனுக்களை அளித்துள்ளனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த தினம் என்பதால் கட்சி அலுவலகத்துக்கு வந்த நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலரும், விருப்ப மனுக்களைப் பெற்று அங்கேயே பூர்த்தி செய்து அளித்தனர்.

விருப்ப மனுக்களை மார்ச் 5-ஆம் தேதி வரை, அதிமுக தலைமை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து அளிக்கலாம் என்று கட்சி சார்பில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கங்கைகொண்டானில் உணவுப் பூங்கா

முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை, பிப். 24: திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் புதிதாக அமைக்கப்பட உள்ள உணவுப் பூங்காவுக்கு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.

இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு புதன்கிழமை வெளியிட்ட செய்தி:-

சென்னை மாவட்ட மக்களுக்கு வீட்டுக் காய்கறி தோட்டம் அமைக்க காய்கறி விதைகள், நுண்ணுயிர் உரங்கள் அடங்கிய காய்கறி தளைகள், அழகு மற்றும் தொட்டிச் செடிகள், இயற்கை உரங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட தோட்டக்கலைப் பொருள்கள் போன்றவற்றை மக்களுக்கு வழங்கிட தனி கிடங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை திருவான்மியூரில் கட்டப்பட்ட இந்த கிடங்கினை முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பில் உணவுப் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

இந்தப் பூங்காவில் உணவுப் பொருள் சோதனை ஆய்வகம், 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு, 7,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, சிப்பம் கட்டும் மையம் போன்ற கட்டமைப்புகளும் அமைக்கப்பட உள்ளன.

விருதுகள்: பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாத்து பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 'பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்., பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது' மூன்று பேருக்கு வழங்கப்படுகிறது.

இந்த விருதானது ரூ.1 லட்சம், ரூ.75,000 மற்றும் ரூ.50,000 காசோலைகள், சான்றிதழ்களைக் கொண்டது.

இந்தப் பரிசு நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சக்திபிரகதீஷ், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வேல்முருகன், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த உ.சிவராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.பி.அன்பழகன், வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பட்டாசு ஆலை வெடி விபத்து: பலி எண்ணிக்கை 22 –ஆக உயர்வு

சாத்தூர், பிப். 24: விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு பெண் புதன்கிழமை உயிரிழந்தார். இதன்மூலம், இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 22 –ஆக உயர்ந்துள்ளது.

அச்சங்குளம் கிராமத்தில் கடந்த 12 –ஆம் தேதி பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஏற்கெனவே 21 பேர் உயிரிழந்துள்ள நிலையில், சாத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நடுச்சூரங்குடி பகுதியைச் சேர்ந்த பா. ஜெயா (50), புதன்கிழமை உயிரிழந்தார்.

வெடி விபத்தில் காயமடைந்த 13 பேர் சாத்தூர் மற்றும் மதுரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

एम एस टी सी लिमिटेड
MSTC LIMITED
(A Govt. of India Enterprise)
3rd Floor, ISPAT Bhawan, No. 5, Kodambakkam High Road, CHENNAI - 600 034, Ph: 9490054101/102/28285093/28285098

E-AUCTION SALE

On A/c INDUS TOWERS LTD, TRICHY EA-33049 on 01.03.2021. Material: DG Category, Cables, MS items, Batteries etc. For details, visit **www.mstcecommerce.com / www.mstcindia.co.in. Bidders should regularly visit above website to keep themselves updated.**

Government of India
DEPARTMENT OF ATOMIC ENERGY
DIRECTORATE OF PURCHASE & STORES
Madras Regional Purchase Unit (MRPU)

E-TENDER NOTICE

ONLINE tenders are invited by Regional Director, MRPU for and on behalf of President of India for the following Tender enquiries

Sl. No.	Tender No / Specification & Quantity	Brief Description	Due Date (up to 14:30 Hrs)
1	DPS/MRPU/1/1/2091/TPT/882	CNC 3 AXES COORDINATE MEASURING MACHINIE (CMM)	28/04/2021
2	DPS/MRPU/4/4/2481/TPT/883	XRD	28/04/2021
3	DPS/MRPU/1/4/2512/PT/1472	Portable smart alpha / beta continuous air monitors	29/04/2021
4	DPS/MRPU/4/4/2649/PT/1459	11 kV ROUND ARMOURED XLPE CABLE	29/04/2021
5	DPS/MRPU/1/2/2677/PT/1474	SINGLE-STRIP AND TRIPLE-STRIP THERMAL SEALING MACHINE	30/04/2021
6	DPS/MRPU/1/3/2864/PT/1476	Liquid Scintillator counter with 3 PMT to support TDCR measurement along with shielding	30/04/2021

Complete tender documents are available in the e-tender portal **http://etenders.dpsdae.gov.in.** The tender should be submitted ONLINE as per the tender document.

REF : DPS/MRPU/PT/515 **REGIONAL DIRECTOR**

YES BANK
பதிவு & கார்பொரேட் அலுவலகம்:
YES பேங்க் லிமிடெட், ஒன் இன்டர்நேஷனல் சென்டர், டவர் II, 15வது மாடி, சேனாபதி பாபாட் மார்க், எல்பின்ஸ்டோன் (W), மும்பை 400 013.
CIN: L65190MH2003PLC143249, மின்னஞ்சல்: communications@yesbank.in, வலைத்தளம்: www.yesbank.in

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான E -ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், கூட்டுக் கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள YES பேங்கிடம் (ஈடு பெற்று கடன் வழங்கிய) அடமானம்/ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், YES பேங்கின் அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் நேரடி முறை சுவாதீனத்தில் (PHYSICAL POSSESSION) எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள், திரு. அப்துல் ஹசீப் மற்றும் திருமதி A ஹசீனா ஆகியோரிடமிருந்து ஈடு பெற்று கடன் வழங்கிய YES பேங்கிற்குச் சேரவேண்டிய 23 பிப்ரவரி 2021 அன்றுள்ளபடியான கடன்பாக்கி ரூ. 48,33,404.19/- (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நானூற்று நான்கு ரூபாய் மற்றும் பத்தொன்பது பைசா மட்டும்) வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் 02 ஏப்ரல் 2021 அன்று விற்கப்படவுள்ளன. சொத்தின் ரிசர்வு விலை ரூ.31,90,000/- (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மற்றும் EMD தொகை ரூ 3,19,000/- (ரூபாய் மூன்று லட்சத்து பத்தொன்பதாயிரம் மட்டும்).

சொத்து விவரம்

2 BHK அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பிளாட் எண். CS -3, II மாடி, பிளாக் C, வசந்தா கார்டன், PNo.5C, மார்க் குறுக்குத் தெரு, ஜெயின் நகர், அயப்பாக்கம், சென்னை- 600077. பிரிக்கப்படாத பங்கு பரப்பளவு 449 சதுர அடி மற்றும் மேல்கட்டுமானப் பரப்பு 900 சதுர அடி. நான்கு எல்லைகள்: வடக்கு: 20 அடி அகல சாலை, தெற்கு: காலி நிலம், கிழக்கு: தொகுதி B, மேற்கு: காலி நிலம்.

E-ஏல தேதி & நேரம்: 02 ஏப்ரல் 2021 காலை 11.00 - பிற்பகல் 2.00 மணி
(5 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகளுடன்)
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்க இறுதி தேதி : 30 மார்ச் 2021 மாலை 4.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம் :
13 மார்ச் 2021 காலை 11:00 - பிற்பகல் 2:00 மணி

விரிவான ஏல விற்பனை விதிமுறை நிபந்தனைகளுக்கு பின்வரும் இணையதளத்தில் பார்க்கவும்: **http://10.0.49.5/about-us/media/auction-property--** கடன் வழங்கிய வங்கியின் இணையதளம் **www.yesbank.in.** டெண்டர் ஆவணங்களை/ E விலைப்புள்ளி பட்டியலைப் பெறுவதில் அல்லது அசையா சொத்து/ கடனுக்கு ஈடான சொத்து பார்வையிடுவதில் ஏதேனும் சிரமம் இருந்தால் மற்றும் விவரங்கள் பெற வேண்டியது இருந்தால் சம்பந்தப்பட்ட YES பேங்க் லிட்-ன் அதிகாரிகளை அணுகவும். திரு விஜய்குமார் 9986611669 மின்னஞ்சல்: **mvijay.kumar@yesbank.in;** அல்லது M/s e-Procurement Technologies Limited (Auction Tiger) அதிகாரிகளை அணுகவும். ஏலதாரர்களுக்கான உதவி தொலைபேசி எண்கள்: 079-61200587/509. மின்னஞ்சல்: **support@auctiontiger.net**

கடன்தாரர் /ஜாமீன்தாரர்களுக்கான விற்பனை அறிவிப்பு

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கடன் செலுத்த வேண்டிய கடமை இருப்பதை அறிவுறுத்தும் அறிவிப்பாகக் கருத வேண்டும்.

தேதி : 25 பிப்ரவரி 2021, இடம் : சென்னை ஒம்/- (அதிகாரபூர்வ அலுவலர்)

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

மி.து.ந.க.எண்.தெற்கு/491/2021

மின் ஒப்ப அறிவிப்பு

மண்டலம்-14, வார்டு 169ல், புழுதிவாக்கம் ஏரியைச் சுற்றி 102 எண்ணிக்கையில் 10-20 வாட் எல்.ஈ.டி விளக்குகளுடன் கூடிய 3 மீ உயர தெரு விளக்கு மின் கம்பங்கள் வழங்கி நிறுவி இயக்கி வைக்கும் பணிக்கு ஒப்பங்கள் மேற்பார்வைப் பொறியாளர் / மின்சாரம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

பணியின் மதிப்பு: ரூ.25,66,500/- ஆகும்.

ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **11.03.2021** பிற்பகல் **03.00** மணிக்குள் பங்கேற்கலாம். **12.03.2021** பிற்பகல் **03.15** மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/ 1397 /ஒப்பந்தப்புள்ளி/2021 **கண்காணிப்புப் பொறியாளர் / மின்சாரம்**

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மண்டல அலுவலகம், பிளாட் எண்: 40,
80 அடி ரோடு, அண்ணாநகர், மதுரை 625020.
போன்: 0452 2532850, 0452 2532851

மின்னணு ஏல விற்பனைக்கான ரத்து அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால் இதே நாளிதழில் **10.02.2021** வெளியான எங்களது மின்னணு ஏல விற்பனை விளம்பரத்தில் **M/s. அருள் முருகன் ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன்** சொத்தின் ஏலம் ரத்து செய்யப்படுகிறது.

அதிகாரபூர்வ அலுவலர்

TMB தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட், சென்னீர்குப்பம் கிளை
2/52, ஆவடி நெடுஞ்சாலை, திருவள்ளூர் மாவட்டம், சென்னீர்குப்பம், சென்னை-600056.

நகை ஏல அறிவிப்பு

எங்களது வங்கி கிளையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் தங்களது நகைகளை அடமானம் வைத்து நகைக்கடன் பெற்று உள்ளனர். நகைக்கடன் தவணை காலம் முடிந்தும் பதிவு தபால் மூலம் தகவல் தெரிவித்தும், பதிவு தபால் பெற்றுக்கொண்டும் / தபால் பட்டுவாடா ஆகாமலும் நகைகள் இன்றுவரை மீட்கப்படாமல் உள்ளன. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விளம்பரம் கண்டவுடன் தங்களது நகைக்கடனை நிலுவையில் செலுத்தி வரும் **12.03.2021** தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் **2.00** மணிக்குள் நகைகள் மீட்கப்படாவிடில், அந்த நகைகள் **12.03.2021** அன்று வெள்ளிக்கிழமை மாலை **4.30** மணியளவில் எங்களது வங்கி கிளையில் வைத்து பகிரங்க ஏலம் அல்லது தனிப்பட்ட முறையிலோ விற்கப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம். ஏலத்தை நிறுத்தி வைக்கவோ ஏலத்தேதியை மாற்றி வைக்கவோ ஒத்திவைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. கீழே கண்ட நபர் இறந்திருந்தால் இவ்விளம்பரம் சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். நகைகள் விற்றுக்கிடைக்கும் தொகை அவரவர் நேர்முக மறைமுக பொறுப்பு கடன்களில் வரவு வைக்கப்படும். ஏலத்தொகை கடனுக்கு ஈடு செய்த பின் ஏதேனும் பாக்கி இருந்தால் அத்தொகைக்கு வங்கி சட்டப்படி நடவடிக்கை எடுத்து வசூலிக்கப்படும்.

வ. எண்.	கடன் பெற்றவர் பெயரும், முகவரியும் மற்றும் கடன் கணக்கு எண்	கடன் தொகை ரூ.	நிலுவையில் உள்ள தொகை 24.02.2021	நகையின் எடை (கிராமில்)
1.	திரு.K.பஞ்சாட்சரம், எண்.2/262, ஜெ ஜெ நகர், சென்னீர்குப்பம், சென்னை- 600 056. **நகை கடன் எண்.102824**	ரூ. 69,000	ரூ.80,564/-	32.400

குறிப்பு: மேற்படி ஏலத்தை நடத்தவோ ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. ஏலமானது அதே நாளில் குறிப்பிட்ட நேரத்தில் முடிவுறாவிட்டால் அதை அதற்கடுத்த நாட்களில் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் புதிய அறிவிப்பு ஏதுமின்றி தொடரப்படும். ஏலம் எடுக்க விரும்புவோர் அடையாள சான்று, முகவரி சான்று மற்றும் பான் அட்டை (PAN CARD) எடுத்து வர வேண்டும். ஏலம் எடுப்போர் 3% GST சேர்த்து செலுத்த வேண்டும். **கிளை மேலாளர்,**
இடம் : சென்னீர்குப்பம், சென்னை, தேதி : 25.02.2021 **சென்னீர்குப்பம் கிளை**

தி.நகர் - II கிளை: எண்.9 & 10-வது, சர் தியாகராயா ரோடு, தியாகராயா நகர், சென்னை-600 017.
Ph: 044 24342741, 24344191 / 9444396922
Canara Bank

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கி, தி.நகர்-II கிளையில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான **31.01.2021 அன்றுள்ளபடி ரூ.2,89,03,374.90** மற்றும் வட்டி, இதர செலவுகளை **கனரா வங்கி, தி.நகர்-II கிளை** வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **29.03.2021 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள் பெயர்: 1. M/s.ஸ்ரீ கணபதி விலாஸ் மாடர்ன் ரைஸ் மில், எண்.5, வெள்ளாளர் தெரு, மணம்பதி கிராமம், காஞ்சிபுரம்-603125, **2. உரிமையாளர்: Mr.பாஸ்கர் A,** எண்.5, வெள்ளாளர் தெரு, மணம்பதி கிராமம், காஞ்சிபுரம்-603125, **ஜாமீன்தாரர்: 3. கமலா B,** W/o.பாஸ்கர், கற்பக விநாயகர் கோயில், மணம்பதி கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு-603125.

சொத்து விவரம்

1. S.எண்.232/1A, 232/1A & 232/34A&B, **எண்.5, வெள்ளாளர் தெரு, மணம்பதி கிராமம், செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள **70.30 செண்ட் (30,622.68 சதுர அடி) நிலம் மற்றும் 7680 சதுர அடி கட்டிட பரப்பு,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: வெள்ளாளர் தெரு, தெற்கு: ஈஸ்வரன் கோயில் மதில் சுவர் & ஆயக்குட்டை, கிழக்கு: Mr.ராஜா முதலியார்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: Mr.வேலாயுத முதலியாரின் நிலம். **2. ஆலை மற்றும் இயந்திரங்கள்**

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.3,15,53,000/-; டேவணித்தொகை: ரூ.31,55,300/-

டேவணித் தொகையினை 26.03.2021 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் **(www.canarabank.com)** வழங்கப்பட்டுள்ள மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் **M/s.Canbank Computer Services Ltd.,** எண்.218, JP ராயல், 1வது தளம், சம்பிஜ் ரோடு, மல்லேஸ்வரம், **Mr.பசுரே D.D, செல்: 94806 91777 & Mr.ரமேஷ் T.H, செல்: 85536 43144, E-mail:** eauction@ccsl.co.in-ல் **தொடர்பு கொள்ளவும் அல்லது முதன்மை மேலாளர், கனரா வங்கி, தி.நகர்-II கிளை, (Ph.No:044 24342741)** எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது **www.ccsl.co.in** - என்ற மின் ஏல இணையதளத்தை பார்க்கவும்.

தேதி: 18.02.2021; இடம்: சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி**

இந்திய அரசு, அணுசக்தி துறை, நியூக்ளியர் எரிபொருள் வளாகம்,
சிவில் என்ஜினியரிங் டிவிசன், ECIL அஞ்சல், ஹைதராபாத்-500062.
போன்: 040-27184296. ஃபேக்ஸ்: 040-27122532.

திருத்தம்

டெண்டர் அறிவிப்பு எண் C/1239/2021-க்கான தேதிகள் நீட்டிக்கப்படுகிறது - டெண்டர் வேண்டுதல்: 08.03.2021 (21.00 மணி வரை), ஆன்லைனில் சமர்பித்தல்: 12.03.2021 (21.00 மணி வரை), காகித நகல் சமர்பித்தல்: 18.03.2021 (14.00 மணி) மற்றும் டெண்டர் திறத்தல்: 18.03.2021 அன்று 15.00 மணி. இதர அனைத்து நிபந்தனைகளில் மாற்றமில்லை. விரிவான NIT, இணையதளம் www.tenderwizard.com/DAE-ல் கிடைக்கும்.

துணை முதன்மை பொறியாளர் (CED, PD & EP)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகம்,
350, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்தியா முழுவதிலும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு விரும்பும் ஊழியர்களின் 2021–2022–ம் ஆண்டிற்கான (31.03.2021 முதல் 30.03.2022 வரை) மருத்துவ காப்பீடு (Insurance with Cashless facilities) செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அரசு/தனியார் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கு **www.cooptex.com** மற்றும் **www.tenderers.tn.gov.in** என்ற எங்களது இணைய தளத்தினை அணுகவும்,

செமதொஇ/1346/ஒப்பந்தப்புள்ளி/2021 முதன்மை பொது மேலாளர்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகம்,
350, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்தியா முழுவதிலும் பல்வேறு இடங்களிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள், ஒப்பந்த விற்பனை நிலையங்கள், இரக சேமிப்பு கிடங்குகள், விநியோக சேமிப்பு கிடங்குகள், நூல் கிடங்கு, ஏற்றுமதி கிடங்கு, அச்சிடும் சேமிப்பு கிடங்கு, மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் உள்ள துணி இருப்பு, நூல் இருப்பு, தளவாட சாமான்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆகியவற்றை 01.04.2021 முதல் 31.03.2022 வரை காப்பீடு செய்வதற்கு (INSURANCE) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் படிவங்கள் பொது துறை காப்பீட்டு நிறுவனங்கள்/ தனியார் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

மேலும், விவரங்களுக்கு **www.cooptex.com** மற்றும் **www.tenderers.tn.gov.in** என்ற இணைய தளத்தினை அணுகவும்.

செமதொஇ/1347/ஒப்பந்தப்புள்ளி/2021 முதன்மை பொது மேலாளர்

GOVERNMENT OF TAMILNADU
THE TAMILNADU COOPERATIVE TEXTILE PROCESSING MILLS LTD., CH.22
428,Bhavani Main Road, Erode-638 004.
Phone: (0424) 2293907 | Fax: (0424) 2293528 | E-mail: tctpmill2015@gmail.com

Ref No:A/O/1629/2021 **TENDER NOTICE** Dated:25.02.2021

Sealed Tenders are invited from the (Sl.No.1) Manufacturers/Authorised Dealers for the supply of Textile Dyes, processing chemicals/Auxiliary chemicals for processing of Cotton as well as Man made fabrics for period up to 31-03-2022. (Sl.No.2) Supply of sized firewood (without sticks and Root blocks/Knots) of Vembu, Velan, Unjal, Pulian, Mulveli, Karuvel, Eucalyptus, Mixed and Savukku variety for the period upto 31.03.2022. (Sl.No.3) Manufacturers, Traders, Authorised Agents, State/Central Government Undertakings for Supply, Erection and Commissioning of Stenter Machine (1600 mm working width with Electronic Automatic Weft Straightner)-1 No. The filled tenders should be submitted in two cover system i.e. Technical Bid & Price Bid separately enclosed in single cover and sent in a sealed cover superscribed as for (Sl.No.1) = **"Tenders for the Supply of Textile Dyes/ Chemicals/ Auxiliaries for the period upto 31.03.2022" should reach this office on or before 11.00 AM on 26.03.2021, for (Sl.No.2) = "Tenders for the Supply of Firewood for the period upto 31.03.2022" should reach this office on or before 11.30 AM on 26.03.2021, for (Sl.No. 3)= "Tenders for the Supply, Erection and Commissioning of Stenter Machine (1600 mm working width with Electronic Automatic Weft Straightner)" should reach this office on or before 10.30 AM on 26.03.2021** along with Tender Cost, EMD and required documents as specified in the Tender Schedule. The tender documents can also had in person from the office of the Mills from 25.02.2021 by remitting cost as noted in the Tender Schedule. The Tender documents can also be downloaded from the Government website **www.tenders.tn.gov.in at free of cost.** The dates and timings of the Tender Pre-Bid meeting, Technical Bid opening meeting details will be available in the respective tender schedule uploaded in the above noted website.

DIPR/1384/TENDER/2021 **JOINT DIRECTOR/MANAGING DIRECTOR**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
19-ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
CIN U74999TN1971SGC005967

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஜடி.155/ஒ.எண்.159/2020–21. நாள்: 24.02.2021

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஒரு உறை முறையில் பின் வரும் பணிக்கு வகுப்பு I மாநில அளவில், உள்ள தமிழ்நாடு பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதரத்துறைகள் / மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகள் மற்றும் மத்திய / மாநில அரசு சார்பு நிறுவனங்களில் பதிவு பெற்ற கட்டுமான ஒத்த பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 16.03.2021 மாலை 3.00 மணி. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்.

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை
மானாமதுரை சிப்காட் தொழில்துறை வளாகத்தில் 1வது பிரதான சாலையை வலுப்படுத்துதல், 3வது குறுக்குச் சாலையை சீரமைத்தல் மற்றும் 4வது & 5வது பிரதான சாலைகள் மற்றும் ஏ.ஓ பிளாக் (A.O Block) சாலை சிறப்பு பழுதுபார்த்தல்.	ரூ.172.00 இலட்சம்	ரூ.96,000/–*

* கேட்பு வரைவோலை சிப்காட் சென்னை–8 நிறுவனத்தின் பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட வேண்டும். வரைவோலை தங்களது பெயரிலே/தங்களது நிறுவனத்தின் பெயரிலே எடுக்கப்படவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணைய தளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி www.tenders.tn.gov.in

கண்காணிப்பு பொறியாளர்

கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயம், சென்னை முன்னிலையில்
O.A.எண்.265 of 2014-க்கு
எதிராக
R.A.எண்.178 of 2019
(சென்னை-DRT II-ல் உள்ள கோப்புகள்)
(சென்னை-DRT I,-ல் உள்ள பழைய OA எண்.253 of 2014)

M/s.பேங்க் ஆஃப் இந்தியா, மயிலாப்பூர் கிளை, எண்.120/174, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை-600004, சார்பில் அதன் கான்ஸ்டிடியூடெட் அட்டர்னி
...விண்ணப்பதாரர்/வாதி

எதிர்

M/s.ஷ்யாம் பேக், சார்பில் அதன் உரிமையாளர்:திரு.K.சங்கர், அலுவலக முகவரி: எண்.11, ரசாக் கார்டன் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-600 106 & 9 நபர்கள்
...பிரதிவாதிகள்/எதிர்வாதிகள்

1-10 வரை உள்ள பிரதிவாதிகளுக்கான அறிவிப்பு

1. **M/s.ஷ்யாம் பேக்,** சார்பில் அதன் உரிமையாளர்:திரு.K.சங்கர், அலுவலக முகவரி: எண்.11, ரசாக் கார்டன் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-600 106.
2. **K.சங்கர்,** 2A, மூன்றாவது தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை-600 026.
3. **S.கவுரி,** 2A, மூன்றாவது தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை-600 026.
4. **R.சகுந்தலா,** ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
5. **R.இளங்கோவன்,** ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
6. **Ms.R.சாந்திபாய்,** த/பெ.லேட்.C.ராஜூ, ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
7. **Ms.R.வாசுகி,** த/பெ.லேட்.C.ராஜூ, ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
8. **Ms.R.செல்வி,** த/பெ.லேட்.C.ராஜூ, ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
9. **Ms.R.விஜயா,** த/பெ.லேட்.C.ராஜூ, ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
10. **Ms.R.ஜெயந்தி,** த/பெ.லேட்.C.ராஜூ, ஃபிளாட் எண்.4, 2வது தளம், விநாயக் ஷெல்டர்ஸ், 17, திருவீதி அம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.

O.A. எண்.265, 2018-ல் மாண்புமிகு பிரைசிடிங் ஆஃபிசர், DRT II, சென்னை இட்ட 10.05.2018 தேதியிட்ட இறுதி உத்தரவை எதிர்த்து M/s. பாங்க் ஆஃப் இந்தியா, மைலாப்பூர் கிளை, RA எண்.178-2019-ல் மாண்புமிகு DRAT-சென்னை முன்பாக மேல்முறையீடு செய்திருக்கிறார் என்பதை அறியவும். இது OA உரிமை கோரலில் OA அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்திற்கான டிஸ்சார்ஜ் மற்றும் R4 முதல் R-10 வரையுள்ளதற்கு எதிரான OA நீக்கத்திற்கு தொடர்புள்ளதாகும். எனவே, சாதாரண தபாலில் அனுப்பிய சம்மனுக்கு சரியான நடவடிக்கை இல்லாத காரணத்தினால் கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரி அவர்களால் 08.04.2021-அன்று ஆஜராகும் படி, மாற்று சேவையாக நாளிதழில் பிரசுரிக்குமாறு உத்தரவிட்டதால் இந்த அறிவிப்பானது வெளியிடப்படுகிறது. RA எண்.178-2019-க்கு தொடர்பாக மேல்முறையீடு செய்பவர் தாக்கல் செய்த மேற்குறிப்பிட்ட மனு தொடர்பான விசாரணையானது, மாண்புமிகு தலைவர், DRAT, சென்னை-க்கு முன்னால் 08.04.2021 அன்று வரவுள்ளது. நீங்கள் கவனிக்க வேண்டியது யாதெனில் நீங்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ 08.04.2021 அன்று காலை 11.00 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறும் பட்சத்தில் நீங்கள் இல்லாத நிலையில் விசாரணை நிகழ்ந்து தகுதியின் படி தீர்ப்பளிக்கப்படும்.

R.உமாகதன்,
வாதியின் வழக்கறிஞர்

கடன் வசூல் தீர்ப்பாயம் எண்.2, சென்னை
4வது தளம், தேவா டவர்ஸ்,
770–A, அண்ணாசாலை, சென்னை – 600 002.

DRC No.22/2020
in
OA No.132/2018

கனரா வங்கி, எண்.112, JC ரோடு, பெங்களூரு–560 002. மற்றொரு விலாசம்: கனரா வங்கி, தேனாம்பேட்டை கிளை, 520, அண்ணா சாலை, தரைத்தளம், சென்னை – 600 018. ...சான்றிதழ் ஹோல்டர்

–எதிர்–

M/s Victorious Knight Trading Co. மற்றும் மூன்று நபர்கள்
...சான்றிதழ் கடன்தாரர்கள்

பெறுநர்
1) M/s Victorious Knight Trading Co., பதிவு செய்யப்பட்ட பங்குதாரர் நிறுவனம் சார்பாக அதன் பங்குதாரர் B.சத்தியநாராயணன், அலுவலக விலாசம்: புதிய எண்.7, பழைய எண்.4, சேஷாத்திரி ரோடு, 3–வது தளம், ஆழ்வார்பேட்டை, சென்னை. **2) B.சத்தியநாராயணன், பங்குதாரர்** M/s Victorious Knight Trading Co, புதிய எண்.7, பழைய எண்.4, சேஷாத்திரி ரோடு, 3–வது தளம், ஆழ்வார்பேட்டை, சென்னை. **3) E.சஞ்சய் சம்பத்,** எண்.2/514B, ஆற்காடு ரோடு, ரிவர் வீயூ, மணப்பாக்கம், சென்னை – 600 116. **4) B.குமாரவேல் பாண்டியன்,** எண்.15/4, 3–வது மெயின் ரோடு, R.A.புரம், சென்னை–600 028. **...சான்றிதழ் கடன்தாரர்கள்**

கோரிக்கை அறிவிப்பு

(வருமான வரிச்சட்டம் 1961–ன் 2வது அட்டவணையின் விதி எண்.2 மற்றும் கடன்கள் மற்றும் திவால் சட்டம் 1993–ன் பிரிவு 29–ன் கீழ்)

தாங்களிடமிருந்து கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வசூலிக்கப்பட வேண்டிய கடன்பாக்கியாக **ரூ.11,88,253/-** (ரூபாய் பதினோறு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மேலும் 06.02.2018–ம் தேதி அதாவது வழக்கு பதிவு செய்த தேதி முதல் கடனை முழுமையாக செலுத்தும் தேதிவரை அதன் மீதான செலவீனங்கள் மற்றும் வருங்கால வட்டி @ 7.5% வருடாந்திர வட்டி (சாதாரண வட்டி) வீதம் கணக்கிட்டு குறிப்பிட்டு இந்த வழக்கில் அசல் மனு எண்.132/2018, (நகல் ஷெட்யூலுடன் இணைக்கப்பட்டுள்ளது) மாண்புமிகு தலைமை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம்–2, சென்னை அவர்களால் 13.01.2020–ம் தேதியிட்ட கடன் வசூல் சான்றிதழ் வழங்கப்பட்டது.

2). தாங்கள் இந்த தொகையை, இந்த அறிவிப்பு கிடைத்த **30 நாட்களுக்குள்** டெபாசிட் செய்ய வேண்டும், தவறும் பட்சத்தில் சட்டப்படி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

3) வங்கி மற்றும் நிதிநிறுவனங்கள் கடன் நிலுவை மீட்பு சட்டம் 1993–ன் பிரிவு 29 கடன் வருமான வரிச்சட்டம் 1961–க்குரிய 2வது அட்டவணையின் 16 விதிப்படி, வசூல் அதிகாரியின் அனுமதியின்றி தங்களுக்கு சொந்தமான எந்தவொரு சொத்தினையும் அடமானம் வைக்க, கடனுக்கு ஈடுவைக்க, குத்தகைக்குவிட அல்லது இதர வகையில் செயல்பட தங்களுக்கோ தங்களது பிரதிநிதிகளுக்கோ அதிகாரம் இல்லை என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

4) தாங்கள் இந்த நீதிமன்றம் முன்னிலையில் 29.04.2021 (வியாழக்கிழமை) காலை 11.30 மணிக்கு ஆஜராகி பணம் செலுத்துவது தொடர்பான அறிக்கை விபரத்தை அளிக்குமாறு இதன் மூலம் தங்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

5) இந்த கோரிக்கை அறிவிப்பானது 21.01.2020 தேதியிட்டு சான்றிதழ் கடன்தாரர்கள் (CD 1 & 2) அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களால் பெறப்படாமல் திரும்ப வந்து விட்டபடியால், இந்த கோரிக்கை அறிவிப்பு செய்திதாளில் பிரசுரிக்கப்படுகிறது.

தீர்ப்பாயம், சென்னை, முத்திரையுடன் 10.02.2021–ம் தேதியன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

Sd/- S.சோஃபின் ரோஸ்
வசூல் அதிகாரி